भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

**नई दिल्ली, मगंलवार, 18 जूलाई, 2000/1922 सका**

New Delhi, Tuesday, 18th July 2000/1922 Saga

*புது தில்லி, 2000, ஜூலை 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1922 சக*


---

The Translation in Tamil of the Opium and Revenue Laws (Extension of Application) Act, 1950 (33/1950), The Legal Services Authorities Act, 1987 (39/1987) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

*அபின் மற்றும் வருவாய்ச் சட்டங்கள் (பொருந்துதலை நீட்டித்தல்) சட்டம், 1950 (33/1950), சட்டப்பணிகள் அதிகாரஅமைப்புகள் சட்டம், 1987 (33/1987) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு (2)இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 16.00

# அபின் மற்றும் வருவாய்ச் சட்டங்கள் (பொருந்துதலை நீட்டித்தல்) சட்டம், 1950.

(சட்ட எண் 33/1950)

[1950, ஏப்ரல் 18]

இந்தியாவின் குறித்த சில பகுதிகளுக்குக் குறித்த சில அபின் மற்றும் வருவாய்ச் சட்டங்களை நீட்டிப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இது நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், அபின் மற்றும் வருவாய்ச் சட்டங்கள் (பொருந்துதலை நீட்டித்தல்) சட்டம், 1950 என்று வழங்கப்பெறும்.

குறித்த சில அபின் மற்றும் வருவாய்ச் சட்டங்களை இந்தியாவின் குறித்த சில பகுதிகளுக்கு நீட்டித்தல்.

2. (1) இந்தியாவின் குறித்த சில பகுதிகளில் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு செல்லாற்றலில் இருந்து, பின்வரும்—

| | |
|---|---|
| (i) அபின் சட்டம், 1857 | 13/1857 |
| (ii) அபின் சட்டம், 1878 | 1/1878 |
| (iii) வருவாய் வசூலிப்புச் சட்டம், 1890 | 1/1890 |
| (iv) அரசாங்க வணிக வரி விதிப்புச் சட்டம், 1926 | 3/1926 |
| (v) அபாயகரமான மருந்துப் பொருள்கள், சட்டம், 1930. | 3/1930 |
| (vi) வருமான வரி விதிப்புச் (விசாரணை ஆணையம்), சட்டம் 1947 | 30/1947 |
| (vii) வரிகள் செலுத்தம் (சொத்து உரிமைமாற்றம்) சட்டம், 1949 | 22/1949 |

என்ற சட்டங்களும், அதன்படி வகுக்கப்பட்ட விதிகளும், ஆணைகளும், ஜம்மு—காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியாவின் எஞ்சிய பகுதிகளுக்கு நீட்டிக்கப்படுகிறது மற்றும் அங்கு செல்லாற்றலில் இருந்து வரும்.

(2) இந்த இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட திருத்தங்கள், மேற்சொன்ன சட்டங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

வருமானவரி விசாரணை தொடர்பான மாநிலச் சட்டங்களில் மாற்றமைவுகள்.

30/1947

3. இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு, ஜம்மு—காஷ்மீர் அல்லாத பிற பகுதி ஆ மாநிலம் எதிலும், வருமான வரிவிதிப்புச் (விசாரணை ஆணையம்) சட்டம், 1947க்கு நேரிணையான சட்டம் (இந்தப் பிரிவில் இதன் பின்பு மாநிலச் சட்டம் என்று சுட்டப்படுவது) எதுவும் செல்லாற்றலில் இருக்குமாயின், அந்தச் சட்டம் பின்வரும் மாற்றமைவுகளுடன் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவரும் :—

(அ) வேளாண் வருமானம் அல்லாத பிற வருமானத்தின் பேரிலான வரி விதிப்பு தொடர்பான பொருட்பாடுகள் பொறுத்து (எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும்) மாநில ஆணையத்திற்குக் குறித்தனுப்பப்பட்ட அல்லது அதன் முன்பு முடிவுறா நிலையிலுள்ள வழக்குகள் அனைத்தும் ;

வரம்புரையாக : மைய ஆணையமானது, இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி வழக்கு எதனையும் மாற்றுகிற காரணத்தால் மட்டுமே, வழக்கு எதிலும் சான்று அளித்திருக்கிற சாட்சி எவரையும மீண்டும் அழைக்கவோ அல்லது மீண்டும் கேட்கவோ கட்டுப்பட்டது ஆகாது, மற்றும் முதன் முதலில் வழக்கை விசாரணை செய்த ஆணையத்தினால் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட அல்லது அதன் முன்பு முன்னிலைப்படுத்தப்பட்ட சான்று எதன்பேரிலும் செயற்படலாம்.

(ஆ) கூறு (அ)வின்படி மைய ஆணையத்திற்கு மாற்றப்பட்ட வழக்குகளை முடிவு செய்கையில், வருமானவரி விதிப்பு (விசாரணை ஆணையம்) சட்டம், 1947இன்படி அதற்குக் குறித்தனுப்பப்பட்ட வழக்குகளை விசாரணை செய்கையில் அது கொண்டிருக்கும் மற்றும் செலுத்தும் அதே அதிகாரங்களைக் கொண்டிருக்கும் மற்றும் செலுத்தும், மற்றும் அந்தச் சட்டத்தின் பிரிவு 4இன் உட்பிரிவு (3)இன்படி அதே கால அளவுக்குச் செயற் பட உரிமை கொண்டதாகும் ;

(ஆஆ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பாயினும் அல்லது பின்பாயினும் மாநிலத்தில் அப்போதைக்குச் செல்லாற்றலில் இருந்த சட்டம் எதனாலும் அதற்குச் சுமத்தப்பட்ட அதிகாரங்கள் எவற்றையும் செலுத்துகை யில் அல்லது செலுத்துவதாகப் புலப்படுகையில், திருவாங்கூரின் அல்லது திருவாங்கூர்-கொச்சியின் தலைமை வருவாய் அதிகாரியால் அளிக்கப்பட்ட முடிபு எதுவும், திருவாங்கூர் வருமானவரிவிதிப்பு (விசாரணை ஆணையம்) சட்டம், 1124 இன் பிரிவு 8இன் உட்பிரிவு (2) இன் நோக்கங்களுக்காக வருமானவரி அதிகாரியால் அளிக்கப்பட்ட முடிபாகக் கொள்ளப்படுதல் வேண்டும் ;

(இ) வேளாண் வருமானம் அல்லாத பிற வருமானம் தொடர்பாக, சொற்கள் எந்த வடிவத்தில் இருந்தாலும், மாநில அரசாங்கம் அல்லது மாநில ஆணையம் குறித்து மாநிலச் சட்டத்தில் உள்ள சுட்டுகை எதுவும், மைய அரசாங்கம் அல்லது, நேர்வுக்கேற்ப, மைய ஆணையம் குறித்த சுட்டுகை யாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும் ;

(ஈ) மைய ஆணையத்தின் அறிக்கையானது, மைய அரசாங்கத் திற்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் மைய அரசாங்கம், எழுத்து வடிவிலான ஆணை வாயிலாக, வருமான வரி, மேல்வரி அல்லது மிகை ஆதாயங்கள் வரி தொடர்பாக, மாநிலத்தில் செல்லாற்றலில் உள்ள சட்டம், அல்லது பிற சட்டத்தின்படி, அது பொருத்தமெனக் நினைக்கிற நடவடிக்கைகள் வேளாண் வருமானம் அல்லாத பிற வருமானத்தை பொறுத்து எவர் ஒருவரின் வழக்குக்கு அந்த அறிக்கை தொடர்புடையதாயிருக்கிறதோ அவருக்கு எதிராக எடுக்கப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம். மேலும், அத்தகைய பணிப் புரை கொடுக்கப்பட்டதன் பேரில், மாநிலத்தில் பொருந்தத்தக்க உரிய சட்டத்தின்படி அந்த பணிப்புரை கொடுக்கப்பட்டிருந்தாற்போன்றும் அந்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தாற் போன்றும், அதன்படி அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முடிக்கப்படலாம்;

(உ) மாநிலத்தில் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதன்படியும் வரி விதிப்புக்குட்பட்டவரின் வேளாண் வருமானமானது, அவரால் செலுத்தத் தக்க வரியைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக அவரது மொத்த வருமானத் தில் சேர்க்கப்பட வேண்டியுள்ளவிடத்து, வேளாண் வருமானம் அல்லாத அவரது பிற வருமானத்தைப் பொறுத்துச் செலுத்தத்தக்க வரியானது, ஒருங்கிணைந்த வரிவிதிப்புச் செய்யப்படுமாயின், அந்த மாநிலத்தில் செல்லாற்றலில் உள்ள உரிய சட்டத்தின்படி செலுத்தத்தக்கதாயிருந்திருக்கக் கூடிய வரியின் மொத்தத் தொகைக்கு, வேளாண் வருமானம் உள்ளடங்கலான மொத்த வருமானத்திற்கு அந்த வருமானம் எந்த விதத்தில் அமைந்துள்ளதோ அதே வீதத்தில் உள்ள ஒரு தொகையாக இருத்தல் வேண்டும் :

வரம்புரையாக : இந்த நோக்கத்திற்காக, மாநிலத்தில் செல்லாற்ற லில் உள்ள உரிய சட்டத்தினால் வேளாண் வருமானத்தின்மீது அனுமதிக்கப் பட்ட வரிக் குறைப்பு எதுவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

விளக்கம் : இந்தப் பிரிவில், ''மைய ஆணையம்'' என்பது, வருமான வரி விதிப்புச் (விசாரணை ஆணையம்) சட்டம், 1947இன்படி நிறுவப்பட்ட 30/1947.
வருமான வரி விசாரணை ஆணையம் என்று பொருள்படும்.

நீக்கறவுகளும் காப்புரைகளும்.

4. இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் அல்லாத பிற ஆ பகுதி மாநிலம் எதிலும் அல்லது கூச்பெகார் இணைக்கப்பட்ட ஒன்றியத்தில் வருமான வரிவிதிப்புச் (விசாரணை ஆணையம்) சட்டம், 1947 அல்லாத பிற, பிரிவு 2இல் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் எதற்கும் நேரிணையான சட்டம் எதுவும் செல்லாற்றலில் இருக்குமாயின், அந்தச் சட்டமானது, இந்தச் சட்டத்தின் தொடக்கத்தின் பேரில், நீக்கப்பட்டு திற்கும் ;

வரம்புரையாக : அத்தகைய நீக்கறவானது—

(அ) அந்தச் சட்டத்தின் முந்தையச் செயற்பாட்டை, அல்லது

(ஆ) அந்தச் சட்டத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து ஏற்க நேர்ந்த தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும், அல்லது

(இ) அத்தகைய தண்டம், தண்டஇழப்பு அல்லது தண்டனை எதனையும் பொறுத்த விசாரணை, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதனையும்

பாதிக்காது, மேலும் அத்தகைய விசாரணை, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதுவும் செய்யப்படலாம், தொடரப்படலாம் அல்லது செயற்படுத்தப் படலாம் மேலும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை இந்தச் சட்டம் பிறப்பிக்கப்படாதிருந்தாற்போன்றே சுமத்தப்படலாம் :

மேலும் வரம்புரையாக : அந்தச் சட்டத்தின் வகையம் எதனின்படியும் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், தற்போது மாநிலத்திற்கு நீட்டிக்கப்பட்டிருக்கிற மைய சட்டத்தின் நேர்ணையான வகையத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக, அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அதற்கிணங்கச் செல்லாற்றலில் இருந்துவரும்.

**இடர்ப்பாடுகளை அகற்றுதல்.**

5. இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு அவை செல்லாற்றலில் இல்லாத, இந்தியாவின் பகுதி எதற்கும் தற்போது நீட்டிக்கப்பட்டிருக்கிற சட்டங்களில், விதிகளில் அல்லது ஆணைகளில் எதனின் வகையங்களுக்கும் செல்திறமளிப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசாங்கமானது அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணை வாயிலாக, இடர்ப்பாடுகளை அகற்றுவதற்குத் தேவையென அதற்குத் தோன்றலாகும் வகையத்தைச் செய்யலாம் அல்லது பணிப்புரையை வழங்கலாம்.

## இணைப்புப் பட்டியல்.

[பிரிவு 2(2)ஐக் காண்க.]

### திருத்தம் செய்யப்பட்ட செய்சட்டங்கள்.

| ஆண்டு. | எண். | குறுந்தலைப்பு. | திருத்தங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1857 | XIII | அபின் சட்டம், 1857 | (1) முகப்புரையில், ''வங்காளத்தில் உள்ள வில்லியம் கோட்டை மாகாணத் தலைநகரில்'' என்ற சொற்களை விட்டுவிடுக.<br>(2) பின்வருவனவற்றைப் பிரிவு 1 என புகுத்துக :—<br>1. குறுந்தலைப்பும் அளாவுகையும்—<br>(1) இந்தச் சட்டம், அபின் சட்டம், 1857 என்று வழங்கப் பெறும்.<br>(2) இது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும். |
| 1878 | I | அபின் சட்டம், 1878 | (1) பிரிவு 1 இல் ''அது அளாவுதல் வேண்டும்'' என்று தொடங்கி ''இதன் பொருட்டு பணிக்கிற'' என்பதுடன் முடிவடைகிற சொற்களுக்கு மாற்றாக பின்வருவனவற்றை அமைக்கவும்.<br>''இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.''<br>பிரிவு 3 இல் ''இறக்குமதி'', ''ஏற்றுமதி'', ''போக்குவரத்து'', ''விற்பனை'', ''விற்பனை செய்தல்'' ஆகிய பொருள்கோள்களுக்கு மாற்றாகப் பின்வருவனவற்றை அமைக்கவும் :—<br>''சுங்க எல்லைகள்'' என்பது, கடற்சுங்க சட்டம், 1878 இன் பிரிவு 3 (அ) இன்படி மைய அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்டவாறான இந்தியாவின் சுங்க எல்லைகளில் எதுவும் என்று பொருள்படும். |

| ஆண்டு | எண். | குறுந்தலைப்பு | திருத்தங்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ''இறக்குமதி'' மற்றும் ' ஏற்றுமதி'' என்பன, முறையே சுங்க எல்லைகள் எவற்றுக்கு குறுக்காக அல்லாது பிறவாறு, மாநிலத் திற்குள் கொண்டு வருவது அல்லது மாநிலத்திலிருந்து வெளியே கொண்டுபோதல் என்று பொருள்படும். |
| | | | ''போக்குவரவு'' என்பது, ஒரே மாநிலத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அகற்றுதல் என்று பொருள்படும். |
| | | | ''விற்பனை'' என்பது, சுங்க எல்லைகளை கடந்த ஏற்றுமதிக்கான விற்பனையை உள்ளடக்காது, மற்றும் ''விற்பனை செய்தல்'' என்பது அவ்வாறே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். |
| 1890 | I | வருவாய் வசூலிப்புச் சட்டம், 1890. | (1) பிரிவு 1 இன் உட்பிரிவு (2) இல், ''பகுதி ஆ மாநிலங்கள்'' என்ற சொற்களுக்கும், எழுத்துக்கும் மாற்றாக ''ஜம்மு-காஷ்மீர் மாநிலம்'' என்ற சொற்களை அமைக்கவும் ; |
| | | | (2) பிரிவு 4 இன் உட்பிரிவு (4) இன் ''பகுதி அ மாநிலம் அல்லது பகுதி இ மாநிலம்'' என்ற சொற்களுக்கும், எழுத்துக்கும் மாற்றாக ''இந்தச் சட்டம் அளாவுகிற மாநிலம் எதற்கும்'' என்ற சொற்களை அமைக்கவும். |
| 1926 | III | அரசாங்க வணிக வரி விதிப்புச் சட்டம், 1926. | (1) முகப்புரையில் ''அல்லது இணையப் பெற்ற மாநிலம்'' ''அல்லது பிற இந்திய மாநிலம் எதனின் அரசாங்கம்'' என்ற சொற்களை விட்டுவிடவும். |
| | | | (2) பிரிவு 2 இன்— |
| | | | (அ) உட்பிரிவு (1) இல் ''பகுதி அ மாநிலங்கள் மற்றும் பகுதி இ மாநிலங்கள்'' என்ற சொற்களுக்கு மாற்றாக, ''இந்தியா'' என்ற சொல்லை அமைக்கவும். |
| | | | (ஆ) உட்பிரிவு 1 அ வை விட்டுவிடவும். |
| | | | (இ) உட்பிரிவு (3) இன் இறுதியில் பின்வரும் சொற்களைச் சேர்க்கவும்— |
| | | | ''மற்றும் இந்தியா'' என்பது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலான இந்திய ஆட்சிநிலவரை என்று பொருள்படும் ; |
| | | | (3) பிரிவு 3 இல் ''இணையப்பெற்ற மாநிலம் அல்லது பிற இந்திய மாநிலம் ஒன்றின் பேரில்'' என்ற சொற்களுக்கு மாற்றாக ''பகுதி ஆ மாநிலத்தின் பேரில்'' என்ற சொற்களையும், எழுத்தையும் அமைக்கவும். |
| 1930 | II | அபாயகரமான மருந்துப் பொருள்கள் சட்டம், 1930. | (1) பிரிவு 1 இன் உட்பிரிவு (2) இல் ''பகுதி ஆ மாநிலங்கள்'' என்ற சொற்களுக்கும், எழுத்துக்கும் மாற்றாக ''ஜம்மு-காஷ்மீர் மாநிலம்'' என்ற சொற்களை அமைக்கவும். |
| | | | (2) பிரிவு 39 இன் உட்பிரிவு (1) இல் ''அல்லது பகுதி ஆ மாநிலத்தின் அல்லது பகுதி இ மாநிலத்தின் சட்டமன்றச் சட்டம் ஒன்று'' என்ற சொற்களுக்கும், எழுத்துகளுக்கும் மாற்றாக ''ஏதேனும் மாநிலத்தின் சட்டமன்றச் சட்டம் ஒன்று'' என்ற சொற்களை அமைக்கவும். |
| 1947 | XXX | வருமான வரி விதிப்புச் (விசாரணை ஆணையம்) சட்டம், 1947 | பிரிவு 1 இன் உட்பிரிவு (2) இல் ''பகுதி ஆ மாநிலங்கள்'' என்ற சொற்களுக்கு மாற்றாக ''ஜம்மு-காஷ்மீர் மாநிலம்'' என்ற சொற்களை அமைக்கவும். |
| 1949 | XXII | வரிகள் செலுத்தம் (சொத்து உரிமை மாற்றம்) சட்டம், 1949 | (1) பிரிவு 1 இன் உட்பிரிவு (2) இல் ''பகுதி ஆ மாநிலங்கள்'' என்ற சொற்களுக்கும், எழுத்துக்கும் மாற்றாக ''ஜம்மு-காஷ்மீர் மாநிலம்'' என்ற சொற்களை அமைக்கவும். |
| | | | (2) பிரிவு 2க்கான விளக்கத்தில் ''பகுதி ஆ மாநிலங்கள்'' என்ற சொற்களுக்கும், எழுத்துக்கும் மாற்றாக ''ஜம்மு-காஷ்மீர் மாநிலம்'' என்ற சொற்களை அமைக்கவும். |